பக்கங்கள் 16+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 17 புதன்கிழமை 13.11.2024 | அதிர்வு 104

## மீனவர் ஒருவர் வெட்டிக்கொலை

வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்காகி மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று புதன்கிழமை காலை காலி, ஹபராதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிஹிரிபென்ன 02 ▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### பன்மைத்துவ இலங்கையே எமது நாடு என்ற எண்ணத்துடன்

# சகலரும் அமைதியாக நாளை வாக்களியுங்கள்

### மனோ கணேசன் கோரிக்கை



"இந்த நாடு எமக்கும் உரித்துடைய சிங்கள, தமிழ், முஸ்லிம், பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ நாடு என்ற எண்ணங்களுடன் அமைதியாக அலைகளில் அள்ளுண்டு போகாமல், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களியுங்கள்."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் நாளை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தேர்தல் ஆகும். இந்தத் தேர்தலின் முடிவு பல மாற்றங்களைக் கொண்டு வரும். இந்த நாடு எமக்கும் உரித்துடைய சிங்கள, தமிழ், முஸ்லிம், பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ நாடு என்ற அடிப்படை இந்தத் தேர்தலின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். 02 ▶

# அனைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்ட வாக்குப் பெட்டிகள்





(எஸ்.நிதர்ஷன்)

நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக யாழ்ப்பாணம் மாவட்ட வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இருந்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லும் பணிகள் இன்று புதன்கிழமை காலை 8 மணியில் இருந்து ஆரம்பமாகின.

யாழ். மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களில் 4 இலட்சத்து 92 ஆயிரத்து 280 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில் வாக்களிப்பு நிலையங்களுக்கான 04 ▶

# வன்னி தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 107 முறைப்பாடுகள்

## மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு



(கி.வசந்தன்)

தேர்தல் விதிமீறல் தொடர்பில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 107 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று வன்னி மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் வவுனியா மாவட்ட அரச அதிபருமான பீ.ஏ.சரத் சந்திர தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் 387 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வவுனியாவில் 152, முல்லைத்தீவில் 137, மன்னாரில் 98 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

அந்த நிலையங்களுக்குத் தேவையான வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள மத்திய நிலையங்களில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 3 இலட்சத்து 6 ஆயிரத்து 81 வாக்காளர்கள் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 585 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 86 ஆயிரத்து 889 பேரும், மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

தேர்தல் கடமைகளுக்காக வன்னியில் 4 ஆயிரத்து 995 அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், 3 ஆயிரத்து 898 பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுவரை தேர்தல் விதிமீறல் தொடர்பில் 107 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்தில் 50 முறைப்பாடுகளும், மன்னார் மாவட்டத்தில் 22 முறைப்பாடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. அவை சிறிய முறைப்பாடுகளாகவே உள்ளன.

அத்துடன், வவுனியா மாவட்டத்தில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும், மன்னார் மாவட்டத்தில் மாவட்ட செயலகமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு மத்திய மகா வித்தியாலமும் வாக்கெண்ணும் மத்திய நிலையங்களாகச் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.” – என்றார்.

# வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்த தமிழ்ச் சங்கத்தினர்

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத்தினர் இன்று புதன்கிழமை நல்லெண்ண அடிப்படையில் சந்தித்தனர்.

இதன்போது சங்கத்துக்கான நிரந்தர இடம் அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய திருக்குறள் உரைநூல் இந்தச் சந்திப்பின்போது ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.



யாழ். தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி, ஆட்சிக் குழு உறுப்பினர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், செயலாளர் ச.லலீசன், விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**சகலரும்...**

இந்த உறுதிப்படுத்தலை நாமே செய்ய வேண்டும். எமக்காக எவரும் செய்ய மாட்டார்கள். இந்த நாட்டின் பன்மைத்துவத்தை நாமே எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளோம். பன்மைத்துவம் மறுக்கப்பட்டதால் நாம்தான் பெரிதும் பாதிக்கப்பட்டோம். ஆகவே, பன்மைத்துவம் என்பது எமது கோஷம். இது பற்றி நாம் எவரிடமும் போதனைகளைக் கேட்டு பெற வேண்டியதில்லை.

ஆகவே, இந்தச் சிந்தனைகளை மனதில் கொண்டு, அமைதியாக அலைகளில் அள்ளுண்டு போகாமல், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தேர்தலில் வாக்களியுங்கள். அதுவே, இலங்கைத் திருநாட்டில் எமது எதிர்காலத்தை உறுதிப்படுத்தும்.” – என்றார்.

**மீனவர் ஒருவர்...**

பிரதேசத்தில் உள்ள மீன்பிடித் துறைமுகத்தில் இடம்பெற்றுள்ளது.

காலி, மிஹிறிபென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய மீனவரே உயிரிழந்துள்ளார் என்று ஹபராதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்விரோதம் காரணமாக மீன்பிடித் துறைமுகத்துக்குச் சென்ற இனங்காணாத மூவரால் இந்த வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபராதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வவுனியாவில் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டன!

(கி.வசந்தன்)

நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இருந்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் 6 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 585 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில் 152 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

குறித்த வாக்குச் சாவடிகளுக்கான வாக்குப் பெட்டிகள் இன்று காலை 7.30 மணி முதல் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

தேர்தல் கடமைகளை இலகுபடுத்தும் முகமாக வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வாயிலின் முன்பகுதியில் பிரிவுக்களுக்கான வரைபடமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மற்றும் வாக்குச் சாவடிப் பகுதிகளில் பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.



















# அனைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்ட வாக்குப் பெட்டிகள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குப் பெட்டிகள் அரச ஊழியர்களின் பங்களிப்பில் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளுக்கு வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்ல விசேட படகு போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, தேர்தல் கண்காணிப்பாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதனை காணக்கூடியதாக உள்ளதுடன் அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் நோக்குடன் விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.















### 2024 ஆம் ஆண்டு பொது தேர்தலுக்காக

# நுவரெலியா மாவட்டத்தில் வேலைகள் பூர்த்தியாகின!

### அரச அதிபர் நந்தன கலபொட தெரிவிப்பு

(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

2024 ஆம் ஆண்டு பொது தேர்தலுக்காக நுவரெலியா மாவட்டத்தில் அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியாகியுள்ளதாக நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் நுவரெலியா மாவட்ட அரச அதிபருமான நந்தன கலபொட தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் 08 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யும் நோக்கில் 17அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 11சுயட்சை குழுக்களை பிரதிநிதித்துவ படுத்தி 308 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 534 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குபெட்டிகள் வாக்குசீட்டுகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் வாகனங்கள் போன்றவை இன்று புதன்கிழமை பலத்த பொலிஸ் பாதுகாப்போடு வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

நுவரெலியா மாவட்டத்தில் 6 லட்சத்து 5292 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் நுவரெலியா மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் 3 லட்சத்து 47 ஆயிரத்து 646பேரும் கொத்மலை தொகுதியில் 88 ஆயிரத்து 219பேரும் ஹாங்குரான்கெத்த தொகுதியில் 78 ஆயிரத்து 437பேரும் வலப்பனை தொகுதியில் 90 ஆயிரத்து 990பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை தேர்தல் கடமைகளுக்காக 10 ஆயிரம் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்த பட்டுள்ளனர். 2 ஆயிரத்து 500பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை வாக்கெண்ணும் மத்திய நிலையமாக நுவரெலியா காமினி மத்திய மகா வித்தியாலயமும் (தேசிய கல்லூரி) நுவரெலியா மாவட்டத்தில் மாவட்டச் செயலகமும் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி நந்தன கலபட தெரிவித்துள்ளார்.





# திருகோணமலை தேர்தல் நடவடிக்கைகளை பார்வையிட்ட சர்வதேச கண்காணிப்பாளர்கள்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலையின் நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளை இன்று (13) தேர்தலுக்கான சர்வதேச கண்காணிப்பாளர்கள் நேரடியாக அவதானித்தனர்.

திருகோணமலை தேர்தல் மாவட்டத்துக்கு உட்பட்ட திருகோணமலை, மூதூர், சேருவிலை தேர்தல் தொகுதிகளின் 318 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குசீட்டுகள், விபுலானந்த கல்லூரியில் அமைந்துள்ள பிரதான வாக்கெண்ணும் நிலையத்தில் இருந்து காலை 8 மணி முதல் விநியோகிக்கப்பட்டன.

இம்முறை மாவட்டத்தில் 3 லட்சத்து 15 ஆயிரத்து 925 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இதில்16 ஆயிரத்து 807 வாக்காளர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்து இருந்தனர். எனினும் அதில் 16 ஆயிரத்து 595 வாக்காளர்கள் மட்டுமே தபால் மூலம் வாக்கை செலுத்தி உள்ளனர் என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவரும், மாவட்ட அரச அதிபருமான சாமிந்த ஹெட்டியாராச்சி ஊடகங்களுக்கு கூறினார்.

மாவட்டத்தின் அனைத்து வாக்களிப்பு நிலையங்களின் வாக்களிப்புக்கான அனைத்து உபகரணங்கள் மற்றும் ஆவணங்கள் உரிய வாக்களிப்பு நிலையங்களின் பிரதான தலைமை தாங்கும் அலுவலர்களால் பொறுப்பேற்கப்பட்டு உரிய பாதுகாப்புடன் எடுத்துச் செல்ப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பண நாயக விலகல்

நாளை விடிந்தால் பொதுத் தேர்தலின் வாக்களிப்பு ஆரம்பமாகி விடும். தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி.

இந்தத் தேர்தலில் சில பண முதலைகளின் நேரடித் தலையீடு இருப்பது அப்பட்டமானாலும் கூட ஒட்டுமொத்தத்தில் அநேகமான வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளில் மந்தமான ஒரு நிலைமையே காணப்பட்டது. தேர்தல் முடிவுகள், அதன் பின்னர் அமையக் கூடிய உத்தேச அரசின் போக்கு ஆகியவை குறித்து முற்கூட்டியே ஊகிக்கக் கூடியதாக இருப்பதால், விளைவுகள் மற்றும் முடிவுகளை எண்ணி - கருதி - பல தரப்புகளும் நேரடித் தலையீட்டில் பயனில்லை என்ற யதார்த்தம் புரிந்து, விலகி நிற்கின்றன என்று ஒரு விளக்கம் கூறப்படுகின்றது.

இந்த யதார்த்தம் புரியாத சில தரப்புகள் நல்ல பாடம் படிக்கக் காத்திருக்கின்றன.

இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் சூழலில் பலன்களை எதிர்ப்பார்க்க முடியாது என்பதால் சில மனக்கசிவுகள் மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களை மையமாகக் கொண்டு கோடீஸ்வர வர்த்தகர்கள் உள்ளிட்ட பிரபுக்கள் வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரங்களுக்கு ஆதரவு வழங்குவது சுமார் எழுபது வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பு மையமான பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோஹண ஹெட்டியாராய்ச்சி கூறியுள்ளார்.

அநேகமான வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளில் மந்தமான ஒரு நிலைமை காணப்பட்டமைக்கான முக்கிய காரணம் இதுவே எனவும், வெளிநாடுகளில் உள்ள பிரபுக்களும், வர்த்தகர்களும் கூட தேர்தல் வேட்பாளர்களின் பிரசாரங்களுக்கு உதவும் மனநிலையில் இருக்கவில்லை எனவும் தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், பிரசார விளம்பரங்களுக்காக பணம் செலவிடுவதும் இரண்டு மடங்கால் குறைவடைந்துள்ளதாக கூறும் பவ்ரல் அமைப்பு, அநேகமான வேட்பாளர்கள் தங்களது பிரசாரங்களுக்காக சமூக வலைத்தளங்களை அதிகம் பயன்படுத்துகின்றமையைக் காணக்கூடியதாக இருந்ததாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தேர்தலுக்குரிய செலவு வரம்புகள் விதிக்கப்படுவதும், தேர்தல் செலவுக் கண்காணிப்புத் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதும் விளம்பரங்களுக்கு பணம் செலவிடுகின்றமை பெருமளவு குறைந்தமைக்கு மற்றொரு காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்வது இம்முறை அதிகரித்திருந்ததாகத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் 8000 இற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களத்தில் இருந்த போதிலும் அவர்களில் கணிசமானோர் நேரடிப் பிரசாரத்தில் அல்லது தீவிர பிரசாரத்தில் அதிக ஈடுபாடு காட்டவில்லை என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய ரீதியில் தேர்தல்களில் பண முதலைகளினதும் பிரபுக்களின் நிதித் தலையீடு - பங்களிப்பு - குறைந்து இருந்தாலும் கூட, சில வர்த்தகர்களும், கோடீஸ்வரர்களும் தாங்கள் நேரடியாகவே இந்தத் தேர்தலில் தலையிட்டு, பணத்தை வாரி இறைத்து, சில அரசியல் நடவடிக்கைகளை நேரடியாக மேற்கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டு அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கின்றது. அது குறித்து தேர்தல் முடிந்த பின்னராயினும் தேர்தல் ஆணையம் விசாரணை நடத்தி உண்மைகளை வெளிக்கொண்டுவர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பது மறுக்கப்பட முடியாதது.





# பதுளையில் வாக்குப்பெட்டிகள் கொண்டுசெல்லும் நடவடிக்கை!

(க.கிஷாந்தன்)

நாளை இடம்பெறவுள்ள பொது தேர்தலை முன்னிட்டு பதுளை மாவட்டத்துக்கான வாக்குப் பெட்டிகள் அனைத்தும் பதுளை மத்திய மகா வித்தியாலயம் மற்றும் தர்மதூத சிங்கள மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இருந்து வாக்குச் சாவடிகளுக்குப் பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

பதுளை மாவட்டத்தில் 530 வாக்களிப்பு நிலையங்களில் 7 லட்சத்து 5772 பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் மஹியாங்கனை, வியலுவ, பசறை, பதுளை, ஹலிஎல, ஊவாபரணகம, வெலிமடை, பண்டாரவளை, ஹப்புத்தளை ஆகிய தேர்தல் தொகுதிகளில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர். மேலும், 69 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களில் அரச அதிகாரிகள் 10 ஆயிரம் பேர் கடமையில் ஈடுப்பட்டுள்ளனர். அத்துடன் பாதுகாப்புக்காக பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸாரும் 3 ஆயிரம் பேர் கடமையில் ஈடுப்பட்டுள்ளனர்.

பதுளை மாவட்டத்துக்கான 09 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய 15 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 05 சுயேட்சை குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தி 240 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# 98 வாக்களிப்பு நிலையங்களுக்கு பாதுகாப்புடன் வாக்குப் பெட்டிகள்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல் நாளை வியாழக்கிழமை (14) இடம்பெறவுள்ள நிலையில் சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் வன்னி தேர்தல் தொகுதி மன்னார் மாவட்டத்துக்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


இந்த நிலையில் இன்று புதன்கிழமை (13) காலை 9.30 மணி தொடக்கம் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 98 வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் பொலிஸ் பாதுகாப்புடன் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

மன்னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும், மாவட்டச் செயலாளருமான க.கனகேஸ்வரன் மற்றும் மன்னார் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் வி.சிவராஜா உள்ளிட்ட அதிகாரிகள் கண்காணிப்புடன் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் இம்முறை 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். வன்னி மாவட்டத்தில் 6 உறுப்பினர்களை தெரிவு செய்ய 432 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

23 கட்சிகளும், 25 சுயேட்சை குழுக்கள் உள்ளடங்களாக 48 கட்சிகள் வன்னி தேர்தல் தொகுதியில் போட்டியிடுகின்றனர். மன்னார் மாவட்டத்தில் தேர்தல் வாக்கு எண்ணும் நிலையமாக மன்னார் மாவட்டச் செயலகத்தில் 8 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாளைய தினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பு தரப்பினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555





# கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லத்தில் சிரமதானம்

(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம் நேற்று (12) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட மாவீரர் பணிக்குழு இந்த ஏற்பாட்டைச் செய்தது.

பணிக்குழுவின் தலைவர் சின்னத்தம்பி சுப்பிரமணியம் மற்றும் செயலாளர் நாகமணி கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் பங்குபற்றுதலில் மாவீரர்களது பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லம் திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு பிரதேசத்தில் அமைந்துள்ளது.

அங்கு எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக இந்த சிரமதானம் உணர்வு பூர்வமாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.









# சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர் கிழக்கு ஆளுநருடன் கலந்துரையாடல்

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளரும், ரஷ்ய கூட்டமைப்பின் மத்திய தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினருமான லெவிசேவ் நிகோலே ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் இன்று (13) திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

கடந்த ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளராக கலந்து கொண்ட இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் .சமன் ஸ்ரீ ரத்நாயக்கவிடம் இருந்து கிடைத்த அழைப்பின் பிரகாரம், சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளராக இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் பங்கேற்கவுள்ளார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த லெவிசேவ்,

சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர் என்ற வகையில் பல நாடுகளின் தேர்தல்களை அவதானித்துள்ளேன்.

இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப தேர்தல் சட்டம் எந்தளவுக்குப் பொருத்தமானது என்பதை அவதானிக்கிறேன்.

இன்று காலை திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரை சந்தித்து தேர்தல் தொடர்பில் கலந்துரையாடினேன்.

நாடாளுமன்ற தேர்தல் உத்தியோக பூர்வ வாக்குச்சீட்டு விநியோகத்தை அவதானித்ததுடன் தேர்தல் நிறைவடைந்த பின்னர் சர்வதேச பார்வையாளராக தேர்தல் தொடர்பான அவதானிப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்கவுள்ளேன்.- என்றார்.







# பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான பொத்துவில் மாணவர் கௌரவிப்பு

(றிஸ்வான் சாலிஹு)

பொத்துவில் பிரதேசத்தில் இருந்து 2023 - 24ஆம் வருடம் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி உரிய கற்கை நெறியை தொடர்வதற்காக பதிவு செய்த முஸ்லிம், தமிழ் மற்றும் சிங்கள மாணவர்கள் 50 பேர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

பொத்துவில் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (10) அருகம்பை தனியார் விடுதியொன்றில் சங்கத்தின் தலைவர் அர்சாத் சஜ்ஜாத் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசில்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் இப்பிராந்தியத்தை சேர்ந்த கல்வியலாளர்கள், வைத்தியர்கள், உலமாக்கள், பாடசாலை அதிபர்கள், இச்சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தராக பணியாற்றி இந்த நாட்டின் மூவின மாணவர்களின் கல்வி மற்றும் வளமிக்க எதிர்கால வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தமைக்காக பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.





# உள்ளூராட்சி நிறுவனங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஆராய்வு

(மஸ்கெலியா)

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் முன்னேற்றம் மற்றும் நிலவும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ். பி. எஸ். அபயகோன் தலைமையில் நுவரெலியா மாநகர சபை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

பொது மக்களுக்கான சேவைகளை வழங்குவதில் உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. அந்தப் பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க வழங்கக் கூடிய குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகள் தொடர்பில் அதிகாரிகள் தீவிர அக்கறை செலுத்தினர்.

மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சமிலா அத்தபத்து, நுவரெலியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர்



வை. பி. விஜேவர்தன, நுவரெலியா மாநகர ஆணையாளர் கே. ஜி. ஐ. டி. பி. விஜயதிலக்க மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் செயலாளர்கள் மற்றும் பாட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# இலங்கை பத்திரிகை வரலாற்றின் சாதனையாளர் சிவகுருநாதன்!

## கனடாவில் பேராசிரியர் பாலசுந்தரம் நினைவு கூர்ந்தார்

இலங்கைப் பத்திரிகைத் துறை வரலாற்றில் நீண்ட நெடுங்காலம் ஓர் தேசிய பத்திரிகையில் பிரதம ஆசிரியராக பணிபுரிந்தவர் என்ற பெருமையை தன்னகத்தே கொண்டவர் கலாசூரி இ. சிவகுருநாதன்.

தமிழ், முஸ்லிம் படைப்பாளிகள் ஏராளமானோரை இலக்கியப் படைப்புத் துறைக்குள் கொண்டு வந்த பெருமை அவருக்குரியதாகும். அதன் பின்னரே நாடெங்கும் இலைமறைகாயாக இருந்த இலக்கியவாதிகள் பலருக்கு முகவரி கிடைக்கத் தொடங்கியது.

அத்துடன் கலாசூரி ஆர். சிவகுருநாதன் பலரை எழுத்தாளர்களாகவும் பத்திரிகையாளராகவும் உருவாக்கியதில் சாதனையே செய்துள்ளார் என்பதும் உண்மையே.

கனடாவில் நிகழ்ந்த நூல் வெளியீட்டில் பேராசிரியர். இ. பாலசுந்தரம் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் கனடாவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன. பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன், ஆகிய மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன.

இந்நிகழ்வின் தலைமையுரையை பேராசிரியர். இ. பாலசுந்தரம் வழங்கினார். அத்துடன் சிறப்புரையை தமிழர் தகவல் ஆசிரியர எஸ். திருச்செல்வம் வழங்கினார்.

இந்த நிகழ்வில் இ. பாலசுந்தரம் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை தமிழ் இலக்கியத்தின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் தினகரன் ஏற்படுத்திய பங்களிப்பும், தினகரன் பிரதம ஆசிரியர் கலாசூரி ஆர். சிவகுருநாதனின் பங்களிப்பும் மிக அளப்பரியதே.

தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் பதவியை மூன்றரை தசாப்த காலத்துக்கும் மேலாக அலங்கரித்த அமரர் ஆர். சிவகுருநாதனுடன் நெருங்கிப் பழகிய அனைவருமே, அன்னாரை அடிக்கடி நினைவு கூர்ந்து கொண்டேயிருப்பார்கள். அவ்வாறு நினைவு கூருவதற்கான கனிவும், ஆளுமைப் பண்புகளும் நிறைந்தவராக வாழ்ந்து மறைந்தவர் அமரர் கலாசூரி ஆர். சிவகுருநாதன். அவரின் வல்லமை, ஆளுமை, எல்லோருடனும் நட்புடன் பழகும் தன்மை சிவகுருநாதனை மக்கள் மனதில் என்றும் பதிய வைத்துள்ளது.

இலங்கையின் தேசிய தினசரிகளில் ஒன்றான 'தினகரன்' என்றவுடன் நமது ஞாபகத்துக்கு வருபவர் தினகரன் பத்திகையில் நீண்டகாலம் பணிபுரிந்த தினகரன் பிரதம ஆசிரியர் கலாசூரி ஆர். சிவகுருநாதன்.– என்றார்.





# சமஸ்தலங்கா தேசிய நடனப் போட்டியில் கல்முனை பற்றிமா இரண்டு சாதனைகள்

(வி.ரி. சகாதேவராஜா)

கல்வியமைச்சால் திருகோணமலையில் நடத்தப்பட்ட தேசிய மட்டத்திலான அகில இலங்கை சமஸ்தலங்கா நடனப்போட்டி – 2024 இல் கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் பிரபல நடன ஆசிரியை திருமதி மாதுமையாள் வரதராஜனின் நெறியாக்கத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புத்தாக்க நிகழ்ச்சிகளான இரு குழு நடனங்கள் இரண்டாமிடங்களைப் பெற்றுள்ளன.

இந்தப் போட்டி திருகோணமலையில் கடந்த 09 ஆம் தமிகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வானது 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களை கொண்ட பாடசாலைகளுக்கு இடையிலான போட்டியாக இடம்பெற்றது .

இதில் அனைத்து மாகாணங்களிலும் இருந்து வெற்றியீட்டிய நடனக்குழுக்கள் பங்குபற்றியிருந்தன. அவற்றில் இரண்டாமிடங்களை இரு போட்டிகளிலும் பெற்றுக்கொண்டது விசேட அம்சமாகும்.

இந்தப் போட்டிக்கான பாடல் வரிகளை ஆசிரியர் யௌவனா வசந்தன் எழுதியுள்ளார். பாடல் வரிகளை பாடியவர் பாடசாலை ஆசிரியர் திருமதி சரண்யா சிவநேசன.

மேலும் போட்டிக்காக மாணவர்களை அழைத்துச்சென்று அவர்களுக்கு ஊக்கம்கொடுத்த பாடசாலையின் ஆசிரியர் எஸ். நந்தகுமார் மற்றும் ஆசிரியர் எஸ்.தவசீலன் எமது பாட சாலை சமூகம் சார்பாக அதிபர் அருட் சகோதரர் ரெஜினோல்ட் நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு குறித்த போட்டி நிகழ்வினை நெறியாக்கம் செய்த ஆசிரியர், பாடல் வரிகளை எழுதிய, பாடிய ஆசிரியர்களும் மாவணவர்களை ஊக்குவித்து உதவிபுரிந்த ஆசிரியர்கள் மற்றும் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்தார்.

மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்கிய பெற்றோர் அனைவருக்கும் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

125 ஆவது ஆண்டில் இந்தக் கல்லூரி காலடி எடுத்து வைத்திருக்கும் இந்தத் தருணத்தில் கல்விசார் விடயங்களிலும் சரி, இணைப்பாடவிதானங்களிலும் சரி வெற்றி மீது வெற்றிகளை அள்ளிக்குவித்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் பற்றிமா பழைய மாணவர்கள் தமது பாராட்டுக்களைதெரிவிக்கின்றனர்.



# நாடாளுமன்ற தேர்தலில் வாக்களிப்பது எப்படி?

நாளை (14) வியாழக்கிழமை இலங்கையில் பத்தாவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுகின்றது.

இந்தத் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது? இந்தத் தேர்தல் முறைமை எவ்வாறானது? என்பது தொடர்பில் இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

முதலில் தான் விரும்பும் கட்சிக்கு அல்லது சுயட்சைகுழுவுக்கு வாக்களிக்க வேண்டும். இந்த அடிப்படை வாக்கு கட்டாயமானதாகும்.

அத்தோடு அந்தப் பட்டியலில் தான் விரும்பும் 3 வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்கை அளிக்கலாம். இது பொதுவான நியதியாகும்.

இருப்பினும் இலங்கையின் இன்றைய தேர்தல் முறையை சற்று ஆழமாக பார்ப்போம்.

### நாடாளுமன்றத் தேர்தலும் உறுப்பினர்கள் தெரிவு முறையும்

நாடாளுமன்ற தேர்தல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் நடைபெறுகின்றது.

அதாவது தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் பெறும் வாக்கு வீதத்துக்கு ஏற்ப ஆசனங்களை, கணித உத்திகளை பயன்படுத்தி பிரித்து வழங்குகின்ற முறையாகும். இதனடிப்படையில் 196 உறுப்பினர்கள் தேர்தல் மூலமும் 29 உறுப்பினர்கள் தேசிய பட்டியல் முறை மூலமும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

தேர்தல் மாவட்ட அடிப்படையிலேயே தேர்தல் நடைபெறுகின்றது. மொத்தமாக 25 நிர்வாக மாவட்டங்கள் உள்ள போதிலும் அரசியல் யாப்பின் 96 ஆவது உறுப்புரைக்கு அமைய 22 தேர்தல் மாவட்டங்களாக வரையறை செய்யப்பட்டுள்ளன. அதாவது 25 நிர்வாக மாவட்டங்களில் யாழ். நிர்வாக மாவட்டமும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டமும் இணைக்கப்பட்டு யாழ் தேர்தல் மாவட்டமாகவும் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய நிர்வாக மாவட்டங்கள் இணைக்கப்பட்டு வன்னி தேர்தல் மாவட்டமாகவும் கணிக்கப்பட்டு அம்பாறை நிர்வாக மாவட்டம் திகாமடுல்ல தேர்தல் மாவட்டமாக அழைக்கப்பட்டு 22 தேர்தல் மாவட்டங்களாக வரையறை செய்யப்பட்டுள்ளன.

### மாவட்டங்களுக்கான ஆசன ஒதுக்கீடு

196 ஆசனங்கள் 22 தேர்தல் மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் 160 ஆசனங்கள் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் தொகைகளின் அடிப்படையிலும் மிகுதி 36 ஆசனங்களும் மாகாண பரப்பளவு அடிப்படையில் அதாவது 1 மாகாணத்துக்கு 4 ஆசனங்கள் என்ற அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

வாக்காளர்களின் தொகையின் அடிப்படையில் 160 ஆசனங்களை பகிர்ந்தளிக்கின்றபோது 22 தேர்தல் மாவட்டங்களிலும் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர் தொகையை 160 என்ற எண்ணிக்கையால் வகுக்கின்றபோது வருவது தகைமை பெறும் தொகையாகும். இத் தகைமை பெறும் தொகையைக் கொண்டு ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகையை தனித்தனியே பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரிக்கப்பட்ட தொகையே மாவட்டங்களுக்கான சனத்தொகை அடிப்படையிலான ஆசனங்களாக இருக்கும். இருப்பினும் 160 ஆசனங்களும் முழுமையாக பகிர்ந்தளிக்கப்படாது எஞ்சியிருக்கும் ஆசனங்கள் தேர்தல் மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட மிகுதி வாக்காளர் தொகையில் கூடுதலான தொகையைக் கொண்ட மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படும். இவ்வாறு பெறப்படும் சனத்தொகை அடிப்படையிலான ஆசனங்களும், மாகாண பரப்பளவு அடிப்படையில் பெறப்படும் ஆசனங்களும் கூட்டப்பட்டு ஒரு தேர்தல் மாவட்டத்துக்கான இறுதி ஆசன ஒதுக்கீடாக அமையும்.

### வேட்புமனு தாக்கல் செய்யும் முறை

பட்டியல் முறையின் கீழேயே வேட்புமனு தாக்கல் செய்யப்பட வேண்டும். தேர்தலுக்கு முன்னர் தேர்தல்கள் ஆணையாளரால் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கான ஆசனத்தொகை வர்த்தமானிப்படுத்தப்படும். ஒவ்வொரு வேட்புமனுவும் குறித்த மாவட்டத்துக்கு என ஒதுக்கப்பட்ட ஆசன எண்ணிக்கையையோடு 3 ஐ கூட்டிவரும் எண்ணிக்கையைக் கொண்டதாக பட்டியல் தயார் செய்யப்பட்டு வேட்புமனு தாக்கல் செய்யப்பட வேண்டும். வேட்புமனுப் பட்டியலில் குறித்த எண்ணிக்கையில் குறைந்த அல்லது கூடிய எண்ணிக்கையினைக் கொண்டிருப்பின் அப் பட்டியல் நிராகரிக்கப்படும்.

உதாரணம்:

திகாமடுல்ல – 7 + 3 = 10

### வாக்களிக்கும் முறை

விகிதாசாரப் பட்டியல் முறையின் கீழ் வாக்களிப்பது சற்றுச் சிரமமானது. வாக்காளன் தமது வாக்குகளை அளிக்கும்போது முதலில் தான் விரும்பும் கட்சிக்கு அல்லது சுயட்சைகுழுவுக்கு வாக்களிக்க வேண்டும். இவ் அடிப்படை வாக்கு கட்டாயமானதாகும். அத்தோடு அப் பட்டியலில் தான் விரும்பும் 3 வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்கை அளிக்கலாம்.

மேலும் அப்பட்டியலில் தான் விருப்பு வாக்கைப் பயன்படுத்துகின்றபோது இலக்கங்களுக்கு மேலே புள்ளடியிட்டுக் காட்ட வேண்டும். 3 விருப்பு வாக்குகளும் வாக்குச் சீட்டில் அளிக்கப்பட வேண்டும் என்பது கட்டாயமில்லை. விரும்பினால் ஒரு இலக்கத்துக்கு மட்டும் அல்லது

தொடர்ச்சி▼

# நாடாளுமன்ற தேர்தலில் வாக்களிப்பது எப்படி?

**தொடர்ச்சி▲**

இரு இலக்கங்களுக்கு மட்டும் அல்லது மூன்று இலக்கங்களுக்கும் புள்ளடியிட்டுக் காட்டலாம். அல்லது எந்தவொரு இலக்கத்துக்கும் புள்ளடியிடாது விடலாம். ஆனால் தான் விரும்பும் கட்சி அல்லது சுயேட்சைக்குழுவின் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டுக் காட்டுவது கட்டாயமாகும்.

கட்சிக்கியின் அல்லது சுயட்சை குழுவின் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டுக் காட்டாது விருப்பு வாக்குகளுக்கு மட்டும் புள்ளடியிடப்படின் அவ் வாக்குகள் நிராகரிக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிக்கியின் அல்லது சுயட்சைகுழுவின் நேரே புள்ளடியிடப்பட்டிருப்பின் அவ்வாக்கும் நிராகரிக்கப்படும். கட்சிக்கு அல்லது சுயட்சைகுழுவுக்கு இடும் வாக்கானது கட்சி அல்லது சுயேட்சைக் குழுக்கள் பெறுகின்ற ஆசனத்தை தீர்மானிக்கும். விருப்பு வாக்குகள் இவற்றின் மூலம் பெறப்பட்ட ஆசனத்துக்கான பிரதிநிதி யார்? என்பதை தீர்மானிக்கும்.

**வாக்கு கணிப்பீடு**

வாக்கு கணிப்பீடானது பல்வேறு கணித உத்திகளின் பிரயோகங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும். வாக்கு கணிப்பீடு தேர்தல் மாவட்ட ரீதியாக தனித் தனியாக இடம் பெறும். அப்போது முதலில் இரு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும். அத்தேர்தல் மாவட்டத்தில் கூடிய வாக்கினைப் பெற்ற கட்சி அல்லது சுயட்சைகுழு மாவட்டத்தில் குறைந்த வாக்கினைப் பெற்ற கட்சி அல் லது சுயட்சைகுழு (5 வீதம் குறைந்த) எவை என அறியப்படும். இதன்படி கூடிய வாக்கினை பெற்ற கட்சி அல்லது சுயேட்சைக் குழுவுக்கு ஒரு சன்மானஃபோனஸ் ஆசனம் வழங்கப்படும். குறைந்த வாக்கினைப் பெற்ற கட்சி அல்லது சுயட்சைகுழு அம் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் 5% ற்கு குறைந்த வாக்கு (வெட்டுப்புள்ளி) பெற்ற கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் அத் தேர்தல் மாவட்டத்தில் எந்தவொரு ஆசனத்தையும் பெற முடியாது என்பதுடன் போட்டியில் இருந்து நீக்கப்படும்.

அப்போது போட்டியிலிருந்து நீக்கப்பட்டவர்களது வாக்குகள் அம் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்கிலிருந்து கழிக்கப்படும். அவ்வாறு கழிக்கப்பட்டு வரும் மிகுதியான தொகை தொடர்புடைய வாக்குகள், இசைவான வாக்குகள் என அழைக்கப்படும்.

இத் தொடர்புடைய வாக்குகளை அம் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஆசன எண்ணிக்கையிலிருந்து ஒன்றைக் கழித்து வரும் எண்ணிக்கையால் பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரிக்கப்பட்டு வரும் தொகை விளைதொகை, முடிவெண், தகுதிகாண் வாக்கு எனப்படும்.

விளைதொகையைக் கொண்டு தனித்தனியே ஒவ்வொரு கட்சி அல்லது சுயட்சைகுழு பெற்ற வாக்குகளை பிரிக்க வேண்டும் (5 வீதம் குறைந்த வாக்குகளைப் பெற்ற பட்டியல்கள் தவிர) இவ்வாறு பிரிப்பதால் வரும் எண்ணிக்கை பட்டியலுக்கான ஆசனங்களாகும். இந்நிலையில் குறித்த ஆசனங்களில் ஏதேனும் ஆசனங்கள் வழங்கப்படாது எஞ்சியிருக்குமானால் அவை பட்டியல்களின் பெரும்பான்மை மிகுதி வாக்குகளின் முன்னுரிமை அடிப்படையில் அவ்வாசனம் வழங்கப்படும். ஒவ்வொரு கட்சிஃசுயேட்சைக் குழுக்கள் வெற்றி பெற்ற ஆசனங்கள் கணிப்பிடப்பட்ட பின்னர் அவ்வாசனத்துக்குரிய பிரதிநிதி யார்? என்பது விருப்பு வாக்குகளின் முன்னுரிமை அடிப்படையில் தீர்மானிக்கப்படும். இங்கு இடைத்தேர்தல்கள் நடைபெறாது ஒரு வெற்றிடம் ஏற்படுமாயின் அடுத்த முன்னுரிமை அடிப்படையில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

**தேசிய பட்டியல்**
**ஆசன ஒதுக்கீடு**

தேசிய பட்டியல் முறை என்பது பொதுத்தேர்தல் இடம்பெற்று முடிந்ததும் தேசிய ரீதியாக கட்சி அல்லது சுயட்சை குழு பெறுகின்ற வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றுக்கான ஆசனங்களை ஒதுக்கீடு செய்கின்ற முறையே இதுவாகும். இதன் மூலம் 29 நாடாளுமன்ற உறுப்பினர்களை சட்ட மன்றில் மேலதிகமாக சேர்த்துக் கொள்ளும் ஓர் வழிமுறையாக இது அமைந்துள்ளது. அதாவது இலங்கை முழுவதும் அளிக்கப்பட்ட கட்சிகள் பெற்ற மொத்த செல்லுபடியான வாக்குகள் கவனத்தில் கொள்ளப்படும். இதனை தேசிய ரீதியாக பெற்ற மொத்த வாக்கு எனலாம். இம் மொத்த வாக்குகளை 29 என்ற எண்ணால் பிரிப்பர். இவ்வாறு பெறும் தொகை தகைமை பெறும் தொகை (ஒரு தேசிய பட்டியலுக்கான ஆசனத்தை பெறும் வாக்கு) எனலாம். இத் தகைமைபெறும் தொகையைக் கொண்டு ஒவ்வொரு கட்சியும் தேசிய ரீதியாக பெற்ற வாக்குகளை தனித்தனியாக பிரிப்பர். அப்போது ஒவ்வொரு கட்சிக்குமான தேசிய பட்டியல் ஆசனங்கள் பெறப்படும்.

நாளை நடைபெறும் பத்தாவது நாடாளுமன்ற தேர்தல் சரித்திரம் படைக்கும் என்பதில் ஐயமில்லை.

**வித்தகர் விபுலமாமணி**
**வி.ரி. சகாதேவராஜா,**
காரைதீவு நிருபர்.

# நுவரெலியாவை மையமாக வைத்து மண்சரிவு அனர்த்தச் செயற்றிட்டம்!

மண்சரிவு அனர்த்தங்களைக் குறைக்கும் சமூக அடிப்படையிலான செயற்றிட்டத்தின் மூன்றாம் கட்டத்தை நுவரெலியா மாவட்டத்தை மையமாக வைத்து நடத்துவதற்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அது தொடர்பான விசேட கலந்துரையாடல் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அனுசரணையுடன் நுவரெலியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட வழிகாட்டலில் அண்மையில் இடம்பெற்றது.

நுவரெலியா மாவட்டத்தில் பருவ மழை தொடங்குவதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட அதிக ஆபத்துள்ள மண்சரிவுக் குடியிருப்புகள் தொடர்பில் பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கு சமூகக் குழுக்களை நிறுவுதல், மண்சரிவு தயார்நிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் முறையான தகவல் முறைமையை ஏற்படுத்துதல். பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் கருத்துப் பரிமாற்றம், என்பன இடம்பெற்றன.

மனிதக் குடியேற்றத் திட்டமிடல் பிரிவின் விஞ்ஞானியால் நுவரெலியா மாவட்டத்தில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் அடையாளம் காணப்பட்ட மண்சரிவு அபாயம் உள்ள 71 குடியேற்ற தொகுதிகளுக்கான சமூக வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு தேவையான அறிவு அடங்கிய பயிற்சிக் கையேடுகள், வரைபடங்கள் மற்றும் எளிய மழை அளவீடுகள் என்பனவும் இங்கு விநியோகிக்கப்பட்டன.

தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் நுவரெலியா மாவட்ட பிரதம புவியியலாளர் என். ஐ. சி. பீரிஸ் மற்றும் தலைமைக் காரியாலய மனித குடியேற்ற திட்டமிடல் பிரிவின் விஞ்ஞானி கசுன் ஏக்கநாயக்க ஆகியோரின் தொழிநுட்ப பங்களிப்புடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதற்காக நுவரெலியா மாவட்டத்தில் மண்சரிவு அபாயம் உள்ள 10 பிரதேச செயலக அலுவலகங்களின் பிரதேச செயலாளர்கள், நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள், அனர்த்த நிவாரண சேவை நிலையத்தின் மாவட்ட மற்றும் பிராந்திய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# ஜார்க்கண்டில் இன்று முதல்கட்ட தேர்தல்

ஜார்க்கண்ட் மாநில சட்டப் பேரவைக்கு முதல் கட்டமாக இன்று 43 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகின்றது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் மொத்தம் 81 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இங்கு ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (ஜே.எம்.எம்), காங்கிரஸ் அடங்கிய இண்டியா கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. ஜே.எம்.எம். கட்சித் தலைவர் ஹேமந்த் சோரன் முதல்வராக உள்ளார். இந்த சட்டப்பேரவையின் பதவிக்காலம் விரைவில் முடிவடைய உள்ளது.

இதைத் தொடர்ந்து, ஜார்க்கண்ட் சட்டப்பேரவைக்கு நவம்பர் 13, 20 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என்று தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதன்படி, முதல்கட்டமாக 43 தொகுதிகளுக்கு இன்று வாக்குப் பதிவு நடைபெறுகின்றது. இந்த 43 தொகுதிகளுக்கான தேர்தல் பிரச்சாரம் நேற்று முன்தினம் மாலையுடன் நிறைவடைந்தது.

# த.வெ.க. தலைவர் விஜய்யின் சிந்தனையில் மாற்றம் ஏற்படும்

## முன்னாள் அமைச்சர் கே.பி.முனுசாமி தெரிவிப்பு

நடிகரும், தமிழக வெற்றிக் கழகத் தலைவருமான விஜய்யின் சிந்தனையில் மனமாற்றம் ஏற்படும் என அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.பி. முனுசாமி கூறியுள்ளார்.

திருவண்ணாமலையில் நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்கூட்டத்தில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.பி. முனுசாமி சிறப்புரையாற்றினார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழகத்தில் 2026 இல் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தல் பணியில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்காக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் கே.பழனிசாமி குழு அமைத்துள்ளார். அரசியல் களப் பணியை மாவட்ட வாரியாக செய்வதற்கு உந்துசக்தியாக, கள ஆய்வு அமையும்.

தேர்தலில் வெற்றி பெறுவதற்கான அனைத்து சாத்திய கூறுகளையும் ஆய்வு செய்து, கிளை நிர்வாகிகள், தொண்டர்களை ஒருங்கிணைத்து, திமுக ஆட்சியில் உள்ள தவறுகள் மற்றும் இயலாமைகளை மக்களிடத்தில் எடுத்து சொல்லி, மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இதற்கு கள ஆய்வு துணையாக இருக்கும். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முழுமையாக செயலிழந்து இருக்கிறது.





நடிகர் விஜய் கட்சியை தொடங்கி உள்ளார். அவர் தலைமையில், தேர்தலில் போட்டியிட உள்ளதாக தெரிவித்துள்ளார். ஆட்சியில் பங்கு என்று தெரிவித்துள்ளார். இத்தனை கொள்கைகளை பிரகடனப்படுத்தி உள்ளார். காலங்கள் மாறும்.

ஒரு நேரத்தில் ஒருவருக்கு ஒரு சிந்தனை ஏற்படும். நடைமுறையில் செல்லும்போது, அந்த சிந்தனையை நிறைவேற்ற முடியாது என தோன்றும். அடுத்த சிந்தனை ஏற்படும். அப்படி வரும்போது அவருக்கு மனமாற்றம் ஏற்படும். அந்த மனமாற்றத்துக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள்வார்.” என்றார்.




# ஹிஸ்புல்லா மீதான தாக்குதல் தொடரும்: இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு




லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படும் என்று இஸ்ரேல் பாதுகாப்பு துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் இராணுவத்துக்கும் லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுக்கும் இடையே போர் நடைபெற்று வருகிறது. கடந்த திங்கள்கிழமை ஹிஸ்புல்லா தீவிரவாதிகள், இஸ்ரேல் பகுதிகளை குறிவைத்து 165 ஏவுகணைகளை வீசினர். இதில் பெரும்பாலான ஏவுகணைகளை இஸ்ரேல் இராணுவம் நடுவானில் அழித்தது. சில ஏவுக ணைகள் இஸ்ரேலின் பினா நகரில் விழுந்தன. இதில் 7 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் இராணுவம் நேற்று அதிகாலை முதல் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் அதிதீவிர தாக்குதல்களை நடத்தி வருகிறது. இஸ்ரேல் போர் விமானங்கள் மற்றும் ட்ரோன்கள், ஹிஸ்புல்லா தீவிரவாதிகளின் முகாம்களை குறிவைத்து குண்டுகளை வீசின. இதில் ஏராளமானோர் உயிரிழந்தனர். இந்த சூழலில் இஸ்ரேல் இராணுவத்துக்கும் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுக்கும் இடையே போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகின.

இதுகுறித்து இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவிக்கையில்,

போர் நிறுத்தம் தொடர்பாக ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுடன் அதிகாரப்பூர்வமாக பேச்சுவார்த்தை நடத்தப்படவில்லை. இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த மாட்டோம். ஆயுதங்களை கடத்த மாட்டோம் என்று ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் உறுதி அளிக்க வேண்டும். வாக்குறுதி அளித்தால் மட்டும் போதாது. அந்த வாக்குறுதியை காப்பாற்ற வேண்டும். அதுவரை அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படாது. ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்படும்.

எங்களது முழு பலத்தோடு தாக்குதலை தொடருவோம். ஈரான் அரசுக்கு இஸ்ரேல் இராணுவத்தின் வலிமையை புரிய வைத்துள்ளோம். ஈரானின் அணு ஆயுத திட்டங்களை தகர்க்க இஸ்ரேல் உறுதி பூண்டிருக்கிறது.” என்று தெரிவித்துள்ளார்.

ஹிஸ்புல்லாவின் ஊடக பிரிவு தலைவர் முகமது ஆரிப் கூறும்போது, “போர் நிறுத்தம் தொடர்பாக இஸ்ரேலுடன் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை. எனினும் இருதரப்புக்கு இடையே மூன்றாம் தரப்பு மூலம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.” என்று தெரிவித்துள்ளார்.




# அமெரிக்காவிற்கு எதிராக இரண்டு தாக்குதல்களை நடத்தியுள்ளதாக ஹவுதி கிளர்ச்சி குழு அறிவிப்பு

செங்கடல் மற்றும் அரபிக்கடலில் அமெரிக்காவிற்கு எதிராக இரண்டு தாக்குதல்களை நடத்தியுள்ளதாக யேமனின் ஹவுதி கிளர்ச்சி குழு அறிவித்துள்ளது.

இதுதொடர்பான அறிவிப்பை ஹவுதி செய்தித் தொடர்பாளர் யாஹ்யா சாரி தனது உத்தியோகப்பூர்வ எக்ஸ் கணக்கில் வெளியிட்டுள்ளார்.

அதன் போது, அமெரிக்க விமானம் தாங்கி கப்பலான யூ.எஸ்.எஸ். ஆபிரகாம் லிங்கனை அரபிக் கடலில் க்ரூஸ் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் குறிவைத்து தாக்கியதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், செங்கடலில் உள்ள இரண்டு அமெரிக்க நாசகாரக் கப்பல்களை பலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் தாக்கி சிதைத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், காசா மற்றும் லெபனான் மீதான அமெரிக்க ஆதரவு போர்கள் முடிவடையும் வரை இந்த தாக்குதல்கள் நிறுத்தப்படாது என்று சாரீ எச்சரித்துள்ளார்.

எவ்வாறாயினும், ஹவுதிக்களின் இந்த தாக்குதல் அறிவிப்பை தொடர்ந்து அமெரிக்க தரப்பில் இருந்து இது வரை எந்த தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை.

பக்கங்கள் 03

# கனடா முரசு

புதன்கிழமை 13/11/2024

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் விபத்தில் சிக்கும் மான்கள்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் அதிக எண்ணிக்கையிலான மான்கள் விபத்துகளில் சிக்குகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை 02▶




# கனடாவில் அரசாங்க நிறுவனங்களில் இனவாத செயல்பாடுகள் அதிகரிப்பு

**கனடாவில் அரசாங்க நிறுவனங்களில் இனவாத செயல்பாடுகள் அதிகரித்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.**

**அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**இந்த இனவாத செயற்பாடுகளினால் சித்திரவதைகள், துஷ்பிரயோகங்கள் தற்கொலைகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.**

**குறிப்பாக கறுப்பின சமூகத்தினர் மீது இவ்வாறான அடக்குமுறைகள், இனக்ரோத செயற்பாடுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.**

கறுப்பின சமூகத்தைச் சேர்ந்த உயர் பதவிகளை வகிப்பவர்கள் மீது திட்டமிட்ட அடிப்படையில் துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றி வரும் மற்றும் பணியாற்றிய கறுப்பின உயர் அதிகாரிகளிடம் தகவல்கள் திரட்டப்பட்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கறுப்பினத்தவர்கள் நிறுவன மட்டத்தில் செய்யும் தவறு தவறுகளுக்குமன்னிப்புவழங்கப்படுவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

சிறிய தவறு இழைத்தாலும் அவர்களுக்கு அதிக தண்டனை வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தலைமைத்துவ பதவிகளை வகிக்கும் கறுப்பின பெண்களும் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது. பல்வேறு வழிகளில் துன்புறுத்தப்படுவதாகவும், பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நியூ ஃபவுண்ட்லான் பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் நியூ ஃபவுண்ட்லான் பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் காயமடைந்து இரு பெண்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தரையில் கிடந்த மின்சார கம்பியோ ஒன்றின் மூலம் மேற்படி நபர்களுக்கு மின்சாரம் கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் குறித்து 02▶






# கனடாவில் கடுமையாக்கப்படும் மல்டிபிள் என்ட்ரி வீசா நடைமுறை

கனடாவில் விசிட் வீசா நடைமுறை கடுமையாக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் 10 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட பல தடவைகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கான விசா நடைமுறை (multiple-entry visas,) ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய குடிவரவு, அகதிகள் மற்றும் குடி உரிமை அலுவலகம் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது.

கனடிய மத்திய அரசாங்கத்தின் இணையதளத்திலும் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மல்டிபிள் என்ட்ரி வீசா என்ற பல தடவைகள் கனடாவிற்குள் பிரவேசிக்க அனுமதிக்கும் வீசா நடைமுறை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் விசிட்டர் வீசா மூலம் 10 ஆண்டுகள் வரையில் நாட்டுக்குள் வந்து செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்த குறிப்பிட்ட காலப்பகுதியில் சுதந்திரமாக அவர்கள் நாட்டுக்குள் வருகை தரவும் நாட்டை விட்டு செல்லவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் புதிய நடைமுறைகளின் பிரகாரம் பத்தாண்டு கால வீசா அனுமதி வழங்கப்படாது எனவும் ஒவ்வொரு விண்ணப்பதாரியின் விண்ணப்பங்களும் தனிப்பட்ட ரீதியில் மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் வீசா வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

என்ன காரணத்திற்காக அவர்கள் வருகை தருகிறார்கள் அவர்களது நிதிநிலை, உடல் ஆரோக்கிய நிலை, தாய் நாட்டிற்கு தன் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.





## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

6 மணித்தியால இடைவெளியில் ஆறு மான்கள் வாகனத்தில் மோதுண்டுள்ளன. மாகாண போக்குவரத்து அமைச்சு இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது.

வனவிலங்குகளை பாதுகாக்கும் நோக்கில் மேற்படி வீதிகளில் வேகக் கட்டுப்பாடுகள் மற்றும் எச்சரிக்கை சமிக்ஞைகள் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் அதிவேக நெடுஞ்சாலைகளில் சராசரியாக 5700 வன விலங்குகள் விபத்துக்குள்ளாவதாகவும் இவற்றில் சுமார் 75 வீதமானவை மான்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக காலை 6:00 மணி முதல் 7 மணி வரையிலும் மாலை 5 மணி வரையில் முதல் 8:00 மணி வரையிலும் அதிகளவான விபத்துக்கள் இடம் பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் விபத்துக்கள் அதிகளவில் இடம் பெறுவதாகவும் மான்கள் இரவு நேரங்களில் கூடுதலாக சஞ்சரிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காலநிலை மாற்றம் இந்த சவால்களை மேலும் அதிகரிக்கும் என போக்குவரத்து அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

## நியூ ஃபவுண்ட்லான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அந்தப் குதியில் பலத்த காற்று வீசியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மின்கம்பி எவ்வாறு பாதுகாப்பற்ற நிலையில் கீழே விழுந்து கிடந்தது என்பது குறித்தும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.







# கனடிய போர் வீரர்கள் கௌரவிக்கப் பட்டனர்

கனடாவின் போர் வீரர்கள் கௌரவ படுத்தப்பட்டுள்ளனர்.

முன்னாள் இராணுவ படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத் தினர் சிரேஸ்ட அரசியல்வாதிகள், அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் இந்த நிகழ்விற்காக ஒட்டாவாவில் ஒன் றுகூடினர்.

இரண்டாம் உலகப்போர் காலம் தொடக்கம் இவ்வாறு படைவீரர்கள் கௌரவபடுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 80 ஆண்டுகளாக இந்த நிகழ்வு நடைபெற்று வருகின்றது. ஆப்கானிஸ்தான், சைப்ரஸ் போன்ற நாடுகளில் கனடிய அமைதி காக்கும் படையினர் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

போரில் உயர்நீத்த படையினருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று முற்பகல் 11 மணிக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தேசிய படை வீரர்களுக்கான நினைவுத்தூபிக்கு அருகாமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.













